1968 மார்ச் 28] [திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்]

ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சாதாரணமாகச் செய்கின்ற குடும்பக் கார்டு முறையில் ரேஷன் வழங்க உடனடியாக சர்க்கார் ஆணை பிறப்பிக்க வேண்டும். ஆகவே, இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து பரிசீலனை செய்து விவாதிக்க இந்த சபையின் அலுவல்களை அரை மணி நேரம் ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே தான் விவாதத்தில் இதைப்பற்றிக் கூறியதாக இப்போதுதான் சொன்னார். இதைப்பற்றி பேரவையிலே முன்னாலே பேசியிருக்கிறார். It shall not revive discussion of a matter which has been discussed in the same session என்ற முறையில் தள்ளிவிடும்படியான காரியமாக இருந்திருக்கிறது. சட்டப் பேரவை விதி 68 (3) உள்விதி (6), இது ஏற்கெனவே பேரவையில் பேசியது என்று சொல்லிவிட்ட காரணத்தால் இதை அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

(iv) வடுகக்குடி கிராம அரிசனங்கள் குடிசைகளுக்குத் தீவைப்பு

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க, சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோரி ஓர் முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

"நன்னிலம் தாலுக்கா, வடுகக்குடி கிராமத்திலுள்ள அரிசன மக்களின் குடிசைகளுக்கு தீ வைத்ததன் விளைவாக எல்லாக் குடிசைகளும் எரிந்து சாம்பலாகி அதனால் அரிசன மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றி விவாதிக்க வேண்டி, சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமாக கோருகிறேன்."

தலைவர் அவர்களே, வடுகக்குடி கிராமத்திலுள்ள அரிசன சேரி மக்களின் குடிசைகள் எல்லாம் தீ விபத்தால் சாம்பலாகி, மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக விவாதிப்பது நல்லது என்று கருதுகிறேன். ஆகவே, இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சாதாரண நிர்வாகத் திற்குட்பட்ட காரியமாதலால், 50 (viii) விதியின்படி இதை அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(v) தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டதும் தொழிலாளர் வேலை இழப்பும்

திரு. எம். பூபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன்படி கீழ்காணும் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோரி முன்னறி விக்கை கொடுத்துள்ளேன்.